As regards the authorship of *Thyāgeśar Kuravañji* it is still a matter for further research. It is however certain that the author of this *Kuṛavañji* lived in the second half of the 17th century A.D. and was the contemporary of Shahaji II (A.D. 1684 – 1712) since he refers to the king in the songs 3, 15, 25 and 31. King Shahaji, the great patron of art and letters, was himself a renowned composer of *nāṭakas* and, if the *Thyāgeśar Kuravañji* included in the list of his dance dramas, the songs contained therein should bear his stamp viz., his signature '*Thyāgeśa*', *Thyāgeśnata* etc. In the absence of such a signature of the Royal composer, the second possibility would be to assign the authorship to one of the court poets of Shahaji's period, particularly Muttukkavirāyar, a great scholar in Tamil, who has composed a *Kurarañji nāṭaka* in Tamil, with Shaji Mahārāja as the titular hero. In the *Kuruvañji Nāṭaka* as in his other works Muttukavirāyar begins his play with the *Toḍaya mangalam* in Sanskrit composed by Shahaji Maharāja himself, which occurs in his '*Kirāta Vilāsam*'. The relevant song is as given below :—

Jaya Pārvatī-ramaṇa – Jaya Jānakīramaṇa |
Jaya Antakadamana – Jaya Madhusūdana |
Jaya Tripurasamkaraṇa – Jaya Vedoddhāraṇa |
Jaya Akhilanutacaraṇa – Jaya Janībharaṇa || Jaya Jaya ||
Jaya Raviśasinetra – Jaya Akhilanutapātra |
Jaya pāvanacaritra – Jaya Jaganmitra ||
Jaya Nandivaravāha – Jaya Aṇḍajāvāha |
Jaya Nityasotsāha – Jaya .... mitadāha || Jaya Jaya ||

After this *Toḍayamangalam* Muttukkavirāyar begins his *Kuravañji* with the following verse in which he clearly gives his *añkita* or signature '*Muttukkavi*' and stamps his authorship of the *Kuravañji* as,

"குறிசொல்ல நல்ல குறவஞ்சி வருவதும் | கன்னி
ஸஹமேஜந்திரனை கலந்து சேருவதும் | என்னும்
இவ்வகையை இ(ய) குறவஞ்சியாய் |
பொங்கயமாய் ஸஹஜ பூபதிமீதில்
அங்கிதமாக அறிந்த முன் தன்னுல்
கருதிய முத்துக்கவி யுரைத்தானே."

If Muttukkavirāyar had also written the *Thyāgeśar Kuruvaūji*, he would have definitely imprinted it with his signature. Even the style of the language is so simple, that, probably it was meant only to appeal to the masses rather than the classes. In the absence of proper internal evidences or even a passing reference to the *Kuravañji* under discussion in other works of the

1. Vide '*Kuravañji Nāṭaka*, M. 527, Telugu Section, TMSSM Library, Tanjore.

poet or of the king, it is to be concluded that the *Thyāgeśar Kuravañji* must have been written by a poet of Shahaji's court who, perhaps in a spirit of dedication to God Thyāgeśa, did not want to reveal his identity. It may be observed that the entire *nāṭaka* brims with his ardent devotion or *bhakti* towards God Thyāgeśa. The style of expression through the medium of Tamil language being very simple and unostentatious, this *Kuravañji* proves to be a good example of musical-cum-dramatic work on the philosophy of the concept of *Bhagavat kāma.*

Mention was already made to the tradition of *kuravañji nāṭakas* being included in the temple rituals and performed within the temple precincts during the *Brahmotsavam* or annual festival. The *Thyāgeśwar Kuravañji,* according to reliable sources seems to have been enacted until recently in the temple precincts of Sri Thyagarajaswamy at Tiruvarur in the *Devaśiriya maṇḍapam* (plate) near the eastern *gopuram.* The enactment formed part of the *Brahmotsavam* conducted annually in the temple in the month of Panguni (March-April) It is said to have been performed for three days, commencing late in the night and prolonging till day break. The popularity of the *Thyāgeśar Kuravuñji* can be estimated from the fact that one of the songs, '*Vāśalidu Vāśalidu*' in Nādanāmakriya raga (song 25), relating to the glory of the temple and the city of Tiruvarur, was being sung by the Devaraḍiyar, standing near the jalli window on the southern *prākāra* adjoining the *grabbagriha* of Sri Thyagarajaswamy, during daily rituals and on special ceremonies. On account of this, the jalli window in the inner *prākāra* (plate VI) has come to be known as '*Tennāvāśal*' (தென்னவாசல்). This is enough proof to the fact that the *Thyāgeśar Kuravanji* was an important *sthalapuraṇa* of the temple of Thyagarajaswami, Tiruvarur. Indeed it is a pity, that the enactment of this wonderful piece of dramatic art, which go into the category of temple ritual dance-drama, was discontinued due to lack of proper patronage. Nevertheless, I was most fortunate to recover the original tunes of songs of the *Thyāgeśar Kuravñaji nāṭaka* from one of the surviving descendants of the family of temple danseuses, Smt. P. K. Tilakam.

In an attempt to bring out an authentic edition of Sri *Thyāgeśar Kuravañji nāṭaka* with musical notation and choreography, besides collecting first hand information from live sources, I have consulted two manuscripts one in Tamil and the other a Sanskrit transliteration of the same and a printed edition of the text of the nāṭaka made available to me by the Tanjore Maharaja Serfoji's Saraswati Mahal Library, Tanjore and Dr. U. V. Swaminatha Iyer's Library, Adyar Madras respectively. Of these, the printed

edition by Sri S. Kalyanasundaram Iyer obtained from Dr. Swaminatha Iyer's Library, has the complete text of the *nāṭaka* with 67 songs. These include besides the *Kāppu, Tōḍayam, daru*, and *Kirtanas*, songs in such poetic metres as *Kaṭṭaḷiakkalippā Agaval, Chanduviruitam, Viruttam, Tāḷiśai, Taravn-kochagakkalippā*, and *Kochagakkalippā*. The Tamil manuscript obtained from the Saraswati Mahal Library has approximately sixty songs, the details of the number of missing songs being (1) the first eight songs are incomplete, only disconnected phrases are available, (2) song 57 is completely missing and (3) song 60 which is the last song in the manuscript is complete. In the Sanskrit manuscript only 27 songs, the 27th song being incomplete, are available. In the present edition the printed copy of the text is followed, as it contains the complete text with the exception of the 66th song in which the missing line is suitably filled up with the corrected version of the *sahitya* furnished by an elderly inhabitant of Tiruvarur. The text of the songs is almost the same in the printed edition and in the Ms. and again, these three coincides with the text of songs given to me by Smt. P. R. Tilakam. After making a detailed study of these materials, the corrected and improved version of the text of the songs is furnished in the present edition. Only those different readings that would not misrepresent the meaning and purport of the songs are given below each song with suitable indications.

As regards the ragas and tunes of the songs of the *Kuṛavañji*, the printed edition and the Sanskrit Ms. have prescribed the ragas for a few songs while the Tamil Ms. has given for none. The ragas mentioned in the Sanskrit Ms. and in the printed text are different from the ragas identified from the tunes furnished by Smt. Tilakam. The Sanskrit Ms. commences with the salutation to Lord Ganeśa as "Sri. Gaṇēsāya namah" and the benedictory verses begin under the heading *Viruttam*, whereas in the printed edition the benedictory verses commence under the caption *Kāppu*, without any salutation to God and the Tamil Ms has neither the salutation nor the heading, but only mentions the *darus*. The following table gives the list of *rāgas* mentioned in the Sanskrit Ms. the printed text and the *rāgas* traditionally sung.

No. Songs	Sanskrit Ms.	Printed edn.	Ragas traditionally sung
10	Ahiriraga	—	Huseni
11	Kamboji	Kamboji	Kamboji
12	Nadanamakriya	—	Saveri
13	Āhiri	—	Sahāna
15	Pantuvarali	Pantuvarali	Saranga
18	Bhairavi	Bhairavi	Ragamalika
21	—	Saurashtram	Sankarabharana
22	Saurashtram	—	Saurashtram
23	Madhyamavati	Madhyamavati	Kamas
25	Kuranji	Sankarabharana	Nadanamakriya
27	Paraj	Nadanamakriya	Behag
29	—	Bhairavi	Kalyani
31	—	Mohanam	Mohanam

Dr. V. Premalatha

தியாகேசர் குறவஞ்சி

முன்னுரை

குறவஞ்சி என்பது, கடவுளை நாடி சரணடையும் பக்தியைச் சங்கேதமாகவும் நாடகபாணியிலும் சித்தரிக்கும், தமிழிலுள்ள புராதன நாடகம். பண்டைய இந்தியாவில் இசை, நாடகம், நாட்டியம் மற்றும் பிற செழுமறக்கலைகள் யாவும் வாழ்க்கையின் தினசரி அலுவர்களில் அங்கங்களாக விளங்கின. இதில்தான் இந்தியாவின் மோதவிலாசம் நன்கு புலப்படுகிறது. முற்காலத்தில் நம் நாட்டில் இல்லங்களில் உபயோகிக்கப்பட்டு வந்த கலயங்கள் யாவும் கவர்ச்சிகரமான அமைப்புடனும் சித்திரவேலைப்பாடுகளுடனும் காணப்பட்டன. இந்தியாவின் உயர்ந்த பொக்கிஷங்கள் யாவும் எளிமையானவை. அவைகள் சிற்பம் உலோகப்படிமம், இசைக்கருவிகள், சரித்திர புகழ்பெற்ற கட்டடங்கள் குறவஞ்சிகள் முதலிய நாட்டிய நாடகங்கள் ஆகும். பல காலமாக இவைகளை நாம் கண்டு அவைகளின் மதிப்பை நாம் அறியாமலிருந்து வந்தோம், காரணம் நாமே எளிமையாக இல்லாததுதான். சமீபகாலத்தில் மக்களிடையே புத்துணர்ச்சி ஏற்பட்டு ஏனைய நாட்டிய நாடகங்களைப்போல் குறவஞ்சி நாடகமும் பொது மக்களின் கவனத்தை ஈர்த்து வருகிறது. குறவஞ்சியில் குறத்தி அல்லது குறி சொல்லும் பெண்மணி முக்கிய பாத்திரமாக இருப்பதால் இந்த நாடகத்திற்குக் குறவஞ்சி நாடகம் என்று பெயர் வரலாயிற்று. உலகில் பிற நாடுகளிலுள்ள ஜிப்ஸி, கூச்சி, லம்பாடி போன்ற நாடோடி மக்களுடன் குறத்தியை ஒப்பிடலாம். இலக்கியங்களிலிருந்து நாம் கண்டறிந்த அளவில் குறவஞ்சி யாவராலும் விரும்பப்படும் ஒரு நாடகமாக இருந்ததாகத் தெரிகிறது. பொதுவாக நாட்டிய நாடக ரூபமாகவுள்ள குறவஞ்சிகளின் கதை, தலைவி இறைவனுடன் ஐக்கியப்பட விழைவதை மையமாகக்கொண்டு சிருங்கார ரஸம் பொருந்தியதாக உடையது. ஆனால் சில குறவஞ்சிகளில் பக்தி அல்லது ஆத்ம தியாகம் போன்ற உணர்ச்சிகளையும் பிரதிபலிக்கச் செய்வதைக் காண்கிறோம். உதாரணமாக, கண்ணப்பர் குறவஞ்சி ஒரு வேடனின் தெய்வபக்தியை முக்யமான ரஸமாகக் கொண்டு ஆதிசங்கரர், மாணிக்கவாசகர் போன்ற மகான்களின் சொற்சுவை, பொருள்சுவைப் பொருந்திய கவிகளிலிருந்து பிறந்தது. இக்கூற்று விளக்கப்பட வேண்டியது ஆதிசங்கரர் தான் இயற்றிய 'சிவானந் தலஹரி' யில், யாவரும் அறிந்த தென்னாட்டின் சிறந்த சிவ பக்தரான கண்ணப்பரின் கதையைச் சொல்லுங்கால்

Mārgāvartita pāduka paśupatch adgasya kūrchāyate
Gaṇḍshāmbunishecanam puraripoh divyābhishekayate |
Kinchit bhakshitam msaśeshakabalam navyopahārāyate
Bhāktih kim na karotyaho vanacharo bhakhtāvatamsāyate ||

என்ற சுலோகத்தில் பக்தியின் மேன்மையை பின்வருமாறு விளக்குகிறார். "அதிசயத்திலும் அதிசயம்! உண்மையான பக்தி எதைத்தான் சாதிக்காது! காட்டில் வேட்டையாடும் கண்ணப்பர் பக்திக்குச் சிறந்த எடுத்

துக்காட்டாக மட்டும் இல்லாமல் பக்திரஸம் ததும்பும் நாட்டிய நாடகத்திற்கு ஏற்ப உன்னதமான கதாநாயகனுகவும் உள்ளார். காடுகளிலும் மலைகளிலும் இடைவிடாது கண்ணப்பர் நடந்தமையால் தேய்வுற்ற கந்தலான பாதரக்ஷை பசுபதியாகிய சிவபெருமானுக்குத் தலையிலணியும் கிரீடமாயிற்று. அவர் வாயில் கொண்டுவரும் எச்சிலுடன் கலந்த நீர், திரிபுரசம்ஹாரியான பரமசிவனால் இவ் யமான அபிஷேகமாகக் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்விதம் அசுத்தமான நீரை திவ்யாபிஷேகமாக அளித்த கண்ணப்பரை ஏன், திரிபுரமெரித்த சிவபெருமான் தண்டிக்கவில்லை? இவற்றுக்கெல்லாம் மேலாக, கண்ணப்பர், பசுபதீச்வரனுக்கு, அருவருக்கத் தக்க வகையில் மாமிச துண்டங்களைத் தான் கடித்து ருசிபார்த்து நிவேதானமாக அளிக்கும் செயல், துன்பத்தின் சிகரத்தை எட்டுகிறது. ஆனால் இறைவன் நற்சுவையுள்ள உணவாகக் கருதி ஏற்றுக்கொண்டு தனக்குத் இடர் செய்த வேடனை ரக்ஷித்து, பக்தர்களில் தலைசிறந்தவராகப் போற்றுகிறா".

கண்ணப்பர் அலைந்து திரிந்து இறைவனை வழிபட்ட காடு ஆந்திரப் பிரதேசத்திலுள்ள க்ஷேத்ரமான காளஹஸ்தி. கண்ணப்பரின் பக்தியைப்பற்றி, சைவப்பெரியார்களான அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் புகழ்ந்துப்பாடியிருந்தாலும் மாணிக்கவாசகரின் கவிநயம் பொருந்திய பாடல்தான் இவர் கதையை நாடக பாத்திரங்களுடன் கூடிய நாட்டிய நாடக பாணியில் குறவஞ்சி நாடகமாக எழுத அடிகோலியது. இப்பாடல் பின்வருமாறு :

"கண்ணப்பனொப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்றொப்பில் என்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்றவான் கருணைச்
சுண்ணப் பொன்னீற்றற்கே சென்றூதாய்கோத்தும்பி."

இவ்விதம், ஆதிசங்கரரின் கவிநயமும் இசைச்செறிவும் கொண்ட சம்ஸ்க்ருத ஸ்லோகமும், மாணிக்கவாசகர், அப்பர், சம்பந்தர், சுந்தரர், சேக்கிழார் போன்ற பெரியோர்களின் பாடல்கள் தமிழிலும், ததும்பும் பக்தி ரஸத்துடனும், இறைவனை சாக்ஷாத்காரம் செய்யும் சூழ்நிலையும் அடிப்படையாக அமைய, தொழுவூரைச்சேர்ந்த மார்க்கண்ட நாவலர் போன்ற கவிஞருக்குக் கண்ணப்பர் குறவஞ்சி போன்ற குறவஞ்சி நாடகங்கள் எழுதுவதற்கு எளிதாயிற்று. கி.பி. 1880-ல் மார்கண்ட நாவலரால் இயற்றப்பட்ட கண்ணப்பர் குறவஞ்சி, குறவஞ்சி-பண்-கீர்த்தனம் என்ற பாணியில் அமையப்பெற்று, நாட்டிய நாடகமாகவும், பாடுவதற்காகவும், காலக்ஷேபம் செய்வதற்காகவும் ஏற்ற முறையில் அமைந்துள்ளது. இந்நாடகம் கவர்ச்சிகரமாக அமைந்துள்ளதற்குக் காரணம், ஒரு வேடன் தாழ்ந்த குலத்தில் பிறந்தாலும் எவ்வாறு தன் பக்தியினால் மேன்மையடைந்து, பரிசுத்தமாகி அறுபத்துமூன்று சைவ நாயன்மார்களுள் ஒருவராகக் கருதப்பட்டு சைவ மதப்பற்றுக்கும் காருண்யத்திற்கும் உன்னதமான எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தான் என்ற கதை நாடகபாணிக்கு ஏற்றவாறு அழகாக அமைந்திருப்பதேயாகும். இத்தகைய கதையமைப்பு குறவஞ்சி

நாடகத்திற்குப்பொருந்துமா என்று சந்தேகிப்பவர்க்கு கண்ணப்பர் குறவஞ்சி தகுந்தபதில் அளிக்கிறது. எவ்வாறெனில், இந்நாடகத்தில் வரும் கதாபாத்திரங்கள் வேடுவர்களான குறவர்களே. மேலும் இதில் கொச்சைத்தமிழும், இலக்கியத்தமிழும் கலந்து காணப்படுகிறது. இதேபோல் இசையும் நாட்டியமும் கிராமீயமாகவும், சாஸ்திரீயமாகவும் நாடகத்தின் சுவைக்கு ஏற்றவாறு அமையப்பெற்றுள்ளது.

சுமார் 250 வருஷங்களுக்கு முன் மற்றொரு குறவஞ்சி திரு. இராசப்ப கவிராயரால் இயற்றப்பட்டது. ஆலயங்களில் நடிக்கப்பெற்ற குற்றால குறவஞ்சியெனப்படும் இக்குறவஞ்சியை அறிஞர்களால், சிறந்த காவியமாகவும், நாடகமாகவும் கருதப்படுகிறது. கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஆலயங்களில் திருவிழாக்காலங்களில் நடிக்கப்பெற்ற நாடகங்களாகிய குறவஞ்சி நாடகங்கள் போதிய ஆதரவு கிடைக்காமையால் பழக்கத்திலிருந்து மறைந்து விட்டன தஞ்சை பிரஹதீச்வரர் கோயிலில் மட்டும் சில வருஷங்களுக்கு முன்புவரையில் நடத்தப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. ஆனால் அங்கும் ஆலய உற்சவ நிகழ்ச்சிகளிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. தஞ்சைக்கோவிலில் சமீபகாலமாக நடைப்பெற்ற இந்நாடகம் கி.பி. 1940 பிரசுரிக்கப்பட்ட சரபேந்திர பூபாலக்குறவஞ்சி நாடகமாகும். பிரஹதீச்வரர் கோவிலில், சித்திரைத்திருவிழாவின்போது 8-ம் நாளன்றும், அஷ்டக்கொடி திருவிழாவின்போது 9-ம் நாளன்றும் இந்நாடகம் நடத்தப்பட்டதாகத்தெரிகிறது.

கண்ணப்பர் குறவஞ்சியின் ரஸபாவத்தை ஊன்றி கவனிக்குங்கால், ஒரு காலத்தில் குறவஞ்சி நாடகங்கள் யாவும் பக்திரஸத்தையே அடிப்படையாகக் கொண்டது என ஊகித்தறியலாம். ஆனால் தமிழ் நாட்டில் சுவிணதசை தோன்றியவுடன் குறவஞ்சி நாடகங்களின் தெய்வத்தன்மை மறைந்து, மானிடர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. உதாரணமாக, முதலாம் இராஜராஜசோழன் (கி.பி. 985-1014) இரண்டாம் சாபோஜி (கி.பி. 1800-1832) ஆகிய மன்னர்கள் நாடகத்தின் கதாநாயகனாக அமைக்கப்பெற்று, பிரஹதீச்வரர் ஆகிய தெய்வங்களை நீக்கிவிட்டனர். உலகம்போற்றும் பிரஹதீச்வரரின் மாபெரும் கோவிலைக்கட்டுவதற்கு இராஜராஜ சோழன் ஆரம்பித்தபோது அம்மன்னனது செயற்கரிய செயல், மக்களின் மனதில், மன்னனிடம் பெருமதிப்பை உண்டாக்கியது. ஏனெனில், இராஜராஜேஸ்வரர் கோவிலே(தஞ்சை பிரஹதீச்வரர் கோவில்)இராஜராஜ சோழன் கட்ட ஆரம்பிக்கும்போது, நிகழ்ந்த பல சுவையான சம்பவங்களைக் கொண்டு பல கதைகளும், இராஜராஜச்வர நாடகம் என்ற நாடகமும் தோன்றின. முதலாம் இராஜராஜ சோழன் கல்வெட்டிலிருந்தும்[1] அவனது மைந்தன் முதலாம் இராஜேந்திர சோழனின் கி.பி. 1055-ம் ஆண்டு கல்வெட்டிலிருந்தும், தஞ்சை பெரிய கோவிலில், வைகாசித்திருவிழாவின்போது, இராஜராஜேச்வர

1. South Indian Inscriptians, Vol. II, pt. 3.

நாடகம் நடிக்கப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. இந்த நாடகமே பிற்காலத்தில் தோன்றிய குறவஞ்சி நாடகங்களுக்கு அடிகோலியது என்பது சிலரின் கருத்து. ஆயினும் இக்கூற்று ஆராய்ச்சிக்குரியது.

சரபேந்திர பூபாலக் குறவஞ்சியை எழுதியவர் கவிஞர் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் திரு. தேசிகர் அவர்கள் இந்நாடகத்தில் உரைநடை, சம்பாஷணைகளுடன் விருத்தம், அகவல், வெண்பா ஆகியவைகளைப் புகுத்தி, நாடகத்தை கீர்த்தனை உருவில் அமைத்துள்ளார். சமீபகாலம் வரையில் நடிக்கப்பெற்ற இக்குறவஞ்சியை நாடகபாணியில் நடிப்பதற்கான முயற்சி ஏதும் செய்யவில்லை. ஆழ்ந்த கருத்துக்களில்லாத பொதுப்படையான கதையம்சத்தைக்கொண்ட பல நாட்டிய இசை உருப்படிகளை ஒன்றாகத்தொடுத்து அமைக்கப்பட்டுள்ளது. இசை, நாட்டியம், அபிநயம் ஆகிய அம்சங்களைக்கொண்டு, தஞ்சை கோவிலில் எழுந்தருளியிருக்கும் பிரஹதீச்வரின் பெருமையையும், தஞ்சை மஹாராஷ்டிர மன்னர்களின் குலதெய்வங்களான பவானி-சந்திரமௌளீச்வரன் பெருமையையும் மைய்யமாகக்கொண்டு இக்குறவஞ்சி நாடகம் எழுதப்பெற்று, ஆலய நாடகங்களில் சிறந்ததென மதிப்பிட வேண்டும் என்ற எண்ணத்தோடும் எழுதப்பட்டாலும் இக்குறவஞ்சி நாடகத்தின் பாட்டுடைத்தலைவன் சரபோஜி மன்னனே. சமீபகாலம் வரையில் நடிக்கப்பட்டு வந்த விதத்திலிருந்து, இந்நாடகம் கதாநாயகனை சரபோஜி மன்னனுக்கு சமர்ப்பிக்கப்பட்டு சதிர்க்கச்சேரிகளில் அணிந்து கொள்ளப்படும் உடையுடனும், மட்டரகமான அணிகளாலும் அலங்கரிக்கப்பட்டும் ஆடப்பட்டு வந்ததால், உடையும் அணிகலன்களும் ஒன்றுடன் ஒன்று பொருந்தாமல், தெய்வீகத்தன்மையை இழந்துவிட்டது. இசையும் மட்டமானது.

இலக்கியத்தில் பல குறவஞ்சிகள் இருந்தாலும், தஞ்சைக்கோவிலில் சமீபகாலம வரை நடிக்கப்பட்டு வந்த சரபேந்திர பூபாலக் குறவஞ்சியைத் தவிர மற்றவை யாவும் இலக்கியங்களாகவே உள்ளன. இவ்விதம் நாட்டிய நாடகங்கள் யாவும் சுஷீணமைடந்ததற்குக் காரணம், இவைகளில் வரும் கதாநாயகனின் பாத்திரம் உலகத்தைப்படைத்த அறிவற்ற கடவுளுக்குப் பதிலாக, கடவுளால் படைக்கப்பட்ட அழியும் தன்மை கொண்ட மனிதனைக்கொண்டு அமைந்ததுதான். இராசப்ப கவிராயர் என்ற கவி, குற்றாலத்தில் கோவிலில் பணி செய்து வந்தார். இவர் இயற்றிய திருக்குற்றாலக் குறவஞ்சி (பிரசுரம் 1963), டாக்டர் உ. வே. சுவாமிநாதய்யரால், குறவஞ்சிகளில் சிறந்ததாகவும், பின்னால் தோன்றிய குறவஞ்சிகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ளதாகவும் கருதப்படுகிறது. குற்றால ஸ்தலத்தின் பெருமையைக் கூறும் ஸ்தலபுராணமாக அமையப்பெற்ற இக்குறவஞ்சி அந்த கோவிலிலே நடிப்பதற்காக எழுதப்பெற்றது. அவ்வாறே பாபநாச முதலியார் இயற்றிய கும்பேபுசர குறவஞ்சி கும்பகோணத்தில் நடிக்கப்பட்டு வந்ததாகவும் தெரிகிறது. அதேபோல், திருவாரூரின் ஸதலபுராணமான தியாகேசர் குறவஞ்சியும் திருவாரூர் ஸ்ரீ தியாகராஜஸ்வாமி கோவிலில் நடிக்கப்பட்டு வந்ததாகத்தெரிகிறது. இவ்விதமாக பல குறவஞ்சிகள் ஆலயங்களில் திருவிழாக்காலங்களில் முக்கிய நிகழ்ச்சியாக நடிக்கப்பட்டு வந்ததாகத் தெரிகிறது.

இதுவரை நமக்குத் தெரிந்த குறவஞ்சிகள் பின்வருமாறு :—

1. திருக்குற்றாலக்குறவஞ்சி
2. கும்பேபுசர் குறவஞ்சி
3. அழகர் குறவஞ்சி
4. சரபேந்திரபூபாலக் குறவஞ்சி
5. அர்த்தநாரீச்வரர் குறவஞ்சி
6. பெத்லஹாம் குறவஞ்சி
7. காங்கேயன் குறவஞ்சி
8. கொடுமுடிக் குறவஞ்சி
9. குமாரலிங்கக் குறவஞ்சி
10. பாம்பணகௌண்டன் குறவஞ்சி
11. செந்தில் குறவஞ்சி
12. சுவாமிமலைக் குறவஞ்சி
13. திருமலையாண்டவர் குறவஞ்சி
14. திருமண்ணிப்படிக்கரைக் குறவஞ்சி
15. தியாகேசர் குறவஞ்சி.
16. திருவிடைக்கழி குறவஞ்சி
17. வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி
18. விராலிமலைக் குறவஞ்சி
19. ஞானக் குறவஞ்சி
20. கபாலீச்வரர் குறவஞ்சி

இவற்றுள் முதல் நான்கும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. சமீபத்தில் இயற்றப்பட்ட குறவஞ்சிகளில், திரு. கே. என். தண்டாயுதபாணி பிள்ளை இயற்றியுள்ள 'சிற்றம்பலக் குறவஞ்சி' விசேஷமாகக் குறிப்பிடத்தக்கது.

அழகர் குறவஞ்சி கோடீச்வரன் என்றழைக்கப்படும் கவிக்குஞ்சரபாரதியால் (1810-1896 கி.பி.) 1840-ல் இயற்றப்பட்டது. இவர் கந்தபுராண கீர்த்தனைகள்பேரின்ப கீர்த்தனைகள் என்ற நூல்களும் இயற்றியுள்ளார். அழகர் குறவஞ்சியின் கதை சாரம், மதுரைக்கு அருகில் அழகர் கோவிலில் கோயில் கொண்டுள்ள சுந்தரராஜப் பெருமாள் என்னும் மால் அழகரை பாட்டுடைத் தலைவனாகக்கொண்டது. கதாநாயகியின் பெயர் மதனவல்லி. இக்குறவஞ்சிப்பாடல்களும் கவிக்குஞ்சரபாரதியின் இதர பாடல்களும் உயர்ந்த சங்கீதமும், அரிய கருத்துக்களும், ஆழ்ந்த பக்தியுடன் சொல் நயமும் பொருந்தி மிளிர்கின்றன. தமிழில்

ஸ்வரசாஹித்யத்துடன் பிரசுரிக்கப்பட்ட முதல் குறவஞ்சி இதுவேயாகும். அழகர் குறவஞ்சி உயர்ந்த சங்கீதத்திற்கும், அருமையான மொழியமைப்பிற்கும் சரபேந்திரபூபாலக்குறவஞ்சி இனிமையான இசைக்கும், குற்றாலக் குறவஞ்சி உயர்ந்த இலக்கிய கருத்துக்களுக்கு பெயர்போனவை என்பது புராதன வழக்கு. உயர்ந்த இசையைக்கொண்ட அழகர் குறவஞ்சியில் கிராமீய சங்கீதமும், சாஸ்திரிய சங்கீதமும் மனிதனின் இரு கண்களைப் போன்றதாகும். குறவஞ்சி நாடகங்களில் வரும், வீணை, மத்தளம், தாளம், சுத்தி, தம்புரா, மேளம், பேரி, முரசு, டமாரம், உடுக்கு, வேய், துடி போன்ற இசைக்கருவிகள் ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரிதும் உதவக்கூடியது. தமிழில் உள்ள குறவஞ்சி நாடகங்கள் யாவும் சிறந்த பொழுது போக்காகும். இவைகளில் ரஸிக்கக்கூடிய அளவில் ஹாஸ்யம் நிறைந்திருக்கும். இந்நாடகங்கள், பாகவதமேள நாடகத்திற்கும், கிராமிய நாட்டிய நாடகத்திற்கும் இடையில் நடுத்தரமான அமைப்பைக்கொண்டது. இங்கும் அங்குமாக ஒருசில பாடல்கள் கர்நாடக சங்கீத பாணியில் அமைந்திருக்கும். ஆயினும் பெரும்பாலான பாடல்கள் எளிமையாகவும் நாட்டுப்புறத்திற்கே உரித்தான கவர்ச்சியுடனும் காணப்படுகின்றன. திருக்குற்றாலக் குறவஞ்சி, அழகர் குறவஞ்சி போன்ற குறவஞ்சிகள் இலக்கிய சுவையுடனும் காணப்படுகின்றன. ஆனால் பெரும்பான்மையான குறவஞ்சிகளின் சாஹித்யங்களில் விசேஷமாகக் கூறுவதற்கு ஒன்றுமில்லை. குறவஞ்சிகளை. உயர்ந்த இசைக்கொண்டதென்றும், நடுத்தர இசைக்கொண்டதென்றும், மெல்லிசைக் கொண்டது என்றும் பிரிக்கலாம். குறவஞ்சிகளில் காணப்படும் இராகங்கள் யாவும் சுத்தமான நாட்டுப்பாடல் மெட்டுக்களுடன் கூடிய ரக்தி ராகங்களேயாகும். விறுவிறுப்பான சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடிய நாட்டியங்களுக்கு ஏற்ற ஜாதிக் கோர்வைகள் சாஹித்யங்களின் இடையில் பொருத்தப்பட்டுள்ளன. சில பாடல்களில் காணப்படும் சுவையான ஹாஸ்யங்கள் ரஸிகர்களின் ஆர்வத்தை தூண்டுவனவாக அமைந்திருக்கும்.

குறவஞ்சிகள் பொதுவாக ஒரேமாதிரியான கதையமைப்பைக்கொண்டவை. அதாவது, ஒரு பெண்மணி, தலைவி, ஒரு ஸ்தலத்தின் அரசன், மந்திரி, அல்லது பிரதானியின் மீதோ அல்லது அவ்வூரில் கோயில் கொண்டுள்ள இறைவன் மீதோ காதல் கொள்ளுதல் ஆகும். இறைவனே, தலைவி காதலிக்கும் பாத்திரமாக ஆகும்போது, இறைவன் பரிவாரங்கள் சூழ ஆடம்பரமாக பவனி வருவதை குறவஞ்சிகளில் காண்கின்றோம். கடைசியில் தலைவியின் விருப்பம்போல் இறைவனை அடைகிறாள். தலைவியின் விரகதாபம் நன்கு சித்தரிக்கப்படுகிறது. தலைவியின் விரகவேதனை, கவிக்கு, விரகதாபத்தை நன்கு சித்தரிப்பதற்குப்பெரிதும் உதவுகிறது. அப்போது தலைவி மன்மதனை விளித்தலும், தன் சகிகளைத் தலைவனிடம் சென்று தன் மனவேதனையை தலைவனுக்கு எடுத்துரைக்குமாறும் வேண்டுகிறாள். அச்சமயம் குறத்தி தோன்றி தலைவியின் கைரேகைப்பார்த்து தலைவியை தலைவன் ஆட்கொள்ள வருவான் என்று உறுதிமொழி கூறுகிறாள். தலைவி மனமுவந்து குறத்திக்கு விலையுயர்ந்த பரிசுகள் வழங்குகிறாள். தலைவி தலைவனைச் சேருகிறாள். குறத்தி தலைவிக்குக் குறிசொல்லும் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்

திக்கொண்டு பூகோளத்தைப் பற்றியும், சமூகத்தைப்பற்றியும், தம் மக்களினத்தைப்பற்றியும் பல அரிய செய்திகளைக்கூறும் பாடல்களைப்பாடுகிறாள். தங்கள் மலைவளம், ஜாதிப் பெருமை, தொழில் மேன்மை இவைகளைப்பற்றிப் பெருமைப் பட கூறி கடுகைத் துளைத்துக் கடலை புகுத்தக்கூடிய தன் சாமர்த்தியத்தையும், காகத்தின் கரிய நிறத்தை வெண்மையாக மாற்றக்கூடிய தன் திறனையும் தொழிலில் தன் திறமையைப் பற்றியும் பெருமைப்படப்பாடி, குறி சொல்லும் தன்னுடைய அபாரத்திறமையையும் கூறுகிறாள். இதற்கு உதாரணமாக விராலி மலைக் குறவஞ்சியில சிங்கியின் பாடலைக் குறிப்பிடலாம். குறவஞ்சி நாடகத்தின் நேரத்தை நீடிக்கும் வகையில் சிங்கன் சிங்கி குளுவன் சம்பவம் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் பக்ஷி சாஸ்திரத்தைப் பற்றி பல சுவையான விஷயங்கள் குறவனின் பாடலிருந்து நமக்குத் தெரியவருகிறது. குறத்தி வீட்டிலிருந்து காணமல் போவதால் குளுவன் அவளை சந்தேகிக்கிறான். குறத்தியைப் பல இடங்களில் தேடி பின்னர் அவளை கண்டு பிடித்து கேள்விகளால் மடக்க, குறத்தியும் குளுவனின் கேள்விகளுக்குத் தக்க விடையளிக்கிறாள். இப்பகுதி ரஸிகர்களின் உற்சாகத்வைத்தூண்டும் வகையில் அமைந்திருக்கும். குறத்தித் தலைவியிடமிருந்து கொணர்ந்த பரிசுப்பொருள்களைக்குளுவன் கண்டதும் மனம் மாறி சந்தோஷமடைந்து குறத்தியுடன் தன் இல்லத்திற்குச்செல்கிறான். நாடகத்தில் குறவன் குறத்தி தோன்றும் பகுதியில் சிறந்த கிராமிய இசையும் நடனமும் கற்பனைக்கெட்டாத விஷயங்களும் காணப்படுகின்றன.

குறவஞ்சி, செந்தமிழ்ல் வழங்கிவரும் தொண்ணூற்றாறு நூல் வகைகளுள் ஒன்று எனவும், இயலாகவுள்ள தமிழ்ப் பாடல்களை இசையுடன் பாடி அபிநயம் பிடிப்பதாலும், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் இதனுள் அடக்கம் என்பதாலும, நாடகத் தமிழில் ஒரு முக்கிய வகையைச் சார்ந்தது. ஆதியில் குறத்திப் பாட்டு என்ற ஒன்றே இருந்தது. இது குறத்தி குறி கூறு தலைத் தெரிவிப்பது. இதற்கு இலக்கணப் பன்னிருபாட்டியலில் கண்டுள்ளது.

“ இறப்பு நிகழ்வெதிர்வென்றுமுக் காலமும்
திறப்பட உரைப்பது குறத்திப்பாட்டே
குறத்திப் பாட்டும் அதனோரற்றே ”

[பன்னிருபாட்டியல்; 53; குறத்திப்பாட்டு]

அதாவது, குறத்திப்பாட்டில் குறத்தி, இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று காலத்து நிகழ்வனவற்றையும் அறிந்து சிறந்த வகையில் அமைய உரைத்தலைப் பாடுவதாம். குறத்திப்பாட்டை யொட்டி கலம்பகத்துள் குறம் என்ற ஒரு செய்யுள் இடம் பெற்றது. இதையே அடிப்படையாகக் கொண்டு தற்காலத்தில் இசைப்பாட்டுக்களால் குறம் என்னும் மற்றொரு வகைநூல்

தோன்றியது. இதிலுள்ள செய்யுட்களெல்லாம் குறத்தியின்[1] வார்த்தைகளே (dialect) குமரகுருபர சுவாமிகளின் மீனாட்சியம்மை குறம் இப்பிரபந்தத்திற்கு உதாரணமாகும்.

பிரபந்தமென்றும் குறவஞ்சியைக் குறிப்பர். ஆயினும், வைணவ நாலாயிர திவ்யப்பிரபந்தம், மற்றும் பௌராணிகப் பிரபந்தங்களினின்றும் இது வேறுபட்டது. அதேசமயம், தமிழ் இலக்கியத்தில் காணப்படும் ஆற்றுப் படையென்னும் பிரபந்தத்துடன் குறவஞ்சியை ஒப்பிடலாம். ஆற்றுப்படை என்பது, ஆற்றுப்படுத்துவது அல்லது வழிப்படுத்துவது என்று பொருள்படும், பொதுவாக இப்பிரபந்தம், வீதியில், பசியாலும் பட்டினியாலும் வாடி, தன் அழகிய மனைவியையும் சுற்றத்தாரையும் காக்க வேண்டிய பொறுப்பினால் தளர் வுற்ற கலைஞனை, வள்ளலிடமிருந்து நிறைய பரிசுகள் பெற்றுத் திரும்பிவரும் கலைஞன் சந்திக்கும் காட்சியுடன் தொடங்குகிறது. வள்ளலிடமிருந்து பரிசு பெற்றுத் திரும்பும் கலைஞன், ஏழைக் கலைஞனிடம் கொண்ட பச்சாதாபத்தி லும், அவனது கலையில் தனக்கு உண்டான மதிப்பினாலும் வள்ளலைப் பெரு மளவு புகழ்கிறான். தான் வள்ளலிடம் சென்ற விதத்தையும், பராக்ரமம் பொருந்திய மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய வள்ளல் எவ்வாறு கலைக்கு அடிமை யானான் என்பதையும், வள்ளல் தனக்கு அளித்த ராஜோபசாரத்தையும், தன் ஏழ்மை நிலையை மாற்றி ஏராளமாகப் பரிசுகளும் பொன்னும் மணியும் கொடை யாக அளித்து, யாவராலும் தான் போற்றப்பட்டு மதிக்கப்படும் நிலைக்கு வள்ளல் தன்னை ஆளாக்கியதையும் விரிவாகக் கூறுகிறான். பிறகு, வழிகாட்டி யாக (guide) வள்ளலின் இருப்பிடத்தையடைவதற்குச் செல்லவேண்டிய வழியையும், பூகோள நிலையையும், வழியில் கடந்து செல்லும் ஊர்களில் காணும் இயற்கை வனப்புகளையும், மக்கள் வாழ்க்கை வளங்களையும், பற்றிக் கூறி, வள்ளலின் பராமரிப்பில் எவ்வாறு சிறந்து அமைதியுடனும், காணப்படு கின்றன என்பதைக் கூறுகிறாள். முதலில் வள்ளலால் ஆதரவளிக்கப்பட்ட கலைக்கும், ஆதரவில்லாது வாழும் கலைக்கும், கலைஞனின் ஏழ்மை நிலைமைக்கும், கலையின் கம்பீரத்திற்கும் உள்ள வித்தியாசங்களைக் காண்கிறோம். கடைசியில் இந்த வேற்றுமை வள்ளலின் கொடைவன்மையால் மறைவுற்று கலைஞர்களின் உள்ளங்களில் அமைதியையும் சந்தோஷத்தையும் உண்டாக்குவதைக் காண் கிறோம்.

ஆற்றுப்படைகளில் வரும் வழிப்போக்கனான கலைஞனை, குறம் பாடல் களில் வரும் குறத்தியுடன் ஒப்பிடலாம். எவ்வாறெனில் இருவரும் வழிகாட்டிக ளாக வருகின்றனர். வள்ளலின் கொடைத்திறனையும் வீரச் செயல்களையும் வழி காட்டியான கலைஞன் புகழ்வதுபோலவே, குறத்தியும் பாட்டுடைத் தலைவனின் குணவிசேஷங்களையும், வீரதீரப் பிரதாபங்களையும் புகழ்ந்து பாடி, தலைவி

---

1. 'குறத்தி' என்னும் சொல் 'குறம்' என்னும் சொல்லிலிருந்து வந்ததாகக் கொள்வதே பொருந்தும். வடமொழிச் சொல்லான 'கிராதா' 'கிராதி' என்பதி லிருந்து வந்ததாக ஆகாது.

தலைவனை அடைவதற்கான உபாயங்களைக் கூறி வழி காட்டுகிறாள். கலைஞனைப் போலவே. குறத்தியும், பாடலாலும், அபிநயத்தாலும், தலைவனுடைய நிலவளம் இணைவளம் முதலியவற்றைக்கூறி, தங்கள் மலைவளம், நாட்டுவளம் தொழில் வளமும் கூறி, பின்னர், தலைவியை நோக்கி, குறி கூறுவதற்குமுன் மெழுகி, கோலமிட்டு பிள்ளையார் வைத்து பூஜை செய்வதற்கானப் பொருளகளைச் சேகரிக்குமாறு கூறி தெய்வத்தைப் பரவி தலைவிக்குக் குறி கூறுவதும், கடைசியில் பாட்டுடைத் தலைவனை வாழ்த்துவதும், குறம் என்னும் பிரபந்த நூலுள் அடங்கும் செய்திகளாகும். இக்குறத்தையே மாதிரியாக வைத்துக்கொண்டு பிற்காலத்துப் புலவர்கள் குறத்தி குறி கூறுவதை நாடகமாக்கிவிட்டனர் எப்படியெனில், நாடகமாக்கும்போது நாடகத்திற்கு முக்கியமான இசைகளும். பாத்திரங்களின் பேச்சும், கட்டியக்காரன் வருகை முதலியனவும் நாடகத்தில் போல் இங்கும் முக்கியமாயின. குறவஞ்சி விரிவுற்ற வழி கீழ்வருமாறு :-

தலைவன் பவனி வருகிறான் தலைவி; அவனைக்கண்டு காமுற்று,சந்திரனையும் மன்மதனையும், தென்றல் முதலிய பொருளையும் முன்னிலைப்படுத்தி புலம்பி விரக நோயால் துன்பமுறுகிறாள். அச்சமயம் தோழிகள் வருகின்றனர்; சைத்யோபசாங்கள் செய்கின்றனர்; தலைவியைத் தேற்ற முயலுகின்றனர்; அவள் தேறவிலலை; தலைவி ஒரு தோழியை தலைவன்பால் தூது விடுகிறாள்; அப்பொழுது ஒரு குறத்தி வந்து மலைவளம், நாட்டுவளம், வாசல்வளம், தன் திறன் முதலியவற்றைக் கூறி தெய்வம் தொழுது தலைவிக்குக் குறி கூறுகிறாள். தலைவியும் குறத்தியும் பேசிக்கொள்ளும சம்பாஷணை ருசிகரமானது. இறுதியில் தலைவி குறத்திக்கு வெகுமதிகள் பல அளித்து அனுப்புகிறாள். இங்ஙனம் குறவஞ்சி (குறவஞ்சி = குறப்பெண்)விரிவுற்றது.

குளுவ நாடகம் என்னும் பிரிதொருநூலும் உண்டு. அது குறவனாகிய குளுவனைப் பற்றியும் குறப்பெண்ணைப் பற்றியும் எழுதப் பெற்றது. ஒரு குளுவன் தன் கையாளாகிய குறவனுடன் (பாங்கன்) வேட்டையாடுவதும். தன் மனைவியாகிய குறத்தியை நினைத்துப் புலம்புதலும், அப்பொழுது கையாள் குறத்தியின் அடையாளங்களைக் கேட்டறிந்து குறத்தியைத் தேடிச் சென்று அவளைக் கண்டு திரும்பி வந்து சொல்வதும், பிறகு குளுவன் குறத்தியைக் கண்டு ஐயயுற்று வினவி உரையாடி அவள் ஊடலைத் தீர்த்து ஒன்றுபடுவதும் குளுவ நாடகத்தின் அமைப்பாகும். குளுவ நாடகம் என்பதால் அது புலவரால் நாடகமாக நடிப்பதற்கென்றே எழுதப் பெற்றமைப் புலனாகும் எனவே, குறத்தி குறி கூறும் நாடகமும், குளுவ நாடகமும் சேர்ந்ததே குறவஞ்சியென்னும் பிரபந்தமாகும். இவ்விரண்டும் ஒரு நாடகமாக இணைக்கப்பட்டன என்பதற்குச் சான்றுகள் பின்வருமாறு :—

(1) குறவஞ்சியில் முன்பகுதிக்கும் பின்பகுதிக்கும் தொடர்பேயில்லை. இவ்வித அமைப்பு நாடக வியலுக்குப் புறம்பானது. எவ்வாறெனில் முன்

பகுதியோடு தலைவியும் அவனைச் சார்ந்தாரும மேடையிலிருந்து மறைந்தே விடுகின்றனர். பிற்பகுதியில் அவர்கள் மேடைக்கு வருவதில்லை.

(2) குறி கூறும் குறத்தி கணவனுடன் பிணங்கிக் கொண்டு வந்தாளென் பது பல குறவஞ்சிகளில் முற்பகுதியில் விளக்கப்படவில்லை, இது பிற்பகுதி யில் தான் விளக்கப்படுகிறது.

(3) ஆதியில் குறவஞ்சி தெய்வங்களையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது. பிற்காலத்திய புலவர் சிலர் தம்மை ஆதரித்த மன்னரையும், வள்ளல்களையும் பாட்டுடைத் தலைவராக்கி குறவஞ்சி எழுதலாயினர். தெய்வங் களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட குறவஞ்சிகளை நோக்குங்கால் (குற்றாலக் குறவஞ்சி, அழகர் குறவஞ்சி, கும்பேசர் குறவஞ்சி, தியாகேசர் குறவஞ்சி) அவற்றுள் முற்பகுதியில் அமைந்துள்ள காதல், ஜீவாத்மன் பரமாத்மனை நாடுவதையே லக்ஷியமாகக் கொண்டு தெய்வீகமானது. முற்பகுதி யில் தோன்றும் குறத்தியின் பாகம் எத்தகையதெனில், சமயத்துறையில் ஜீவன் இறைவனை அடையும் வழியை போதிக்கும் ஆசார்யனின் ஆற்றுப்படுத் தும் செயலையொக்கும். முற்பகுதியில் காணப்படும் தெய்வீகக் காதல்தான், வட மொழியில் ஸ்ரீ ஜெயதேவரின் (கி. பி. 12-ம் நூற்றாண்டு) "கீத கோவிந்தம்' என்னும் நூலின் சாரமெனக் குறிப்பிடத் தக்கது. அங்ஙனமே மாணிக்க வாசகரின் திருக்கோவையும் (திருவெம்பாவை) ஆண்டாளின் திருப்பாவையும்' இத்தகைய தெய்வீகக் காதலையே குறிப்பதாகும். ஏனைய பிரபந்தங்களின் ஆதாரங்களைக் கொண்டே குறவஞ்சி நாடகங்கள் தோன்றியதாகும்.

இதற்கு எதிர் பதமாகப் பிற்பகுதியிலோ மானிடரை மானிடர் காதலிக் கும் வெறும் காதலே, அக்காதலை உணர்த்தும் இடக்கரான மொழிகளே, கிராமிய நடைத் தழுவினவாகவே காணப்படுகின்றது. ஆகையால் முற்பகுதி தெய்வீகக் காதலையும் (பேரின்பம்), பிற்பகுதி மானிட காதலையும் (சிற்றின் பத்தையும்) குறிக்கும்.

(4) உத்தேசமாக இருநூறு ஆண்டுகளாக தமிழ் நாட்டிலே மக்களின் கலையார்வம் மிகுந்து, நீண்ட நேர நடிப்பை மக்கள் உள்ளம் விழைவதாயிற்று. இரவில் தொடங்கி விடியும்வரை ஆடப்பெற்ற கூத்தே இதற்கு எடுத்துக் காட்டாகும். கூத்தில் உள்ள கிராமிய நடையுடை பாவனைகளையே அவர்கள் விரும்பினர். அவ்விருப்பமே இசைகளிலும் பாய்ந்தது. இதனை நோக்குற்ற புலவரும் அன்னவரை மகிழ்விக்க குளுவ நாடகத்தை பிற்பகுதியாகச் செய்து உடன்கூட்டி தங்கள் குறவஞ்சிகளை எழுதலாயினர். இதற்கு உதாரணமாக அச்சிலுள்ள குற்றாலக் குறவஞ்சி பதிப்புகளுள் ஒன்றில் குறத்தி குறி கூறுதலும் குளுவ நாடகமும் இருவேறு பகுதிகளாகப் பெற்றுள்ளன.

குறவஞ்சி நாடகங்களுள் பிரபந்த வகையைச் சேர்ந்த தியாகேசர் குறவஞ்சியில், திருவாரூர் ஸ்தலத்தில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமியே பாட்டுடைத் தலைவன். சோழ தேசத்திலுள்ள க்ஷேத்ரங்களில் ஒன்றான திருவாரூர் சைவசமயக் குரவர்களால் பாடல் பெற்ற ஸ்தலம். பிறக்க முக்தி தரும் திருவாரூர் ஸ்தலம் சப்த விடங்க க்ஷேத்ரங்களுள் ஒன்றானதும் முதன்மையானதும் ஆகும். பூமி தேவியின் ஹ்ருதய கமலமாகவும் கூறப்படுகிறது. தியாகேசர் குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவியின் பெயர் ராஜமோகினி.

செழுநற் கலைகளை சித்தரிக்கும் போது மூன்று முறைகளைக் கையாளலாம் அவையாவன, சங்கேதம், சங்க்ரஹம், விஸ்தாரம் (symbolic, synoptic & narrative) தியாகேசர் குறவஞ்சி, இசையையும் நாட்டியத்தையும் ஒருங்கே கொண்டு நாடகக் கலையை சங்க்ரஹமாகச் சித்தரிப்பதால், இரண்டாவது வகைக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். மற்ற குறவஞ்சிகளைப் போலில்லமல் தியாகேசர் குறவஞ்சி ப்ரத்யேகமான அமைப்பைக் கொண்டது. குறவஞ்சிகளில் பொதுவாகக் காணப்படும் கட்டங்கள் தியாகேசர் குறவஞ்சியில் கிடையாது. உதாரணமாக, காப்பு தோடயம், மங்களம் ஆகிய உருப்படிகளுக்குப் பிறகு கட்டியக்காரன் மேடையில் தோன்றி தலைவன் பவனிவருவதை அறிவிப்பது இக்குறவஞ்சியில் காணப்படவில்லை. கதாநாயகியான ராஜமோகினி தியாகேசரைப் பார்த்ததையோ அல்லது பார்ப்பதையோ எங்கும் குறிக்கப்படவில்லை. இந்த கட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நாட்யாச்சார்யளின் கற்பனைத் திறனுக்கே விட்டு விட்டார் இக்குறவஞ்சியை இயற்றிய புலவர். அதே போல் நாடகத்தின் இரண்டாம் பகுதியில், அதாவது, குளுவ நாடகத்தில் குறவனும் அவனது பாங்கனும் பறவை வேட்டையாடுவது திடீரென்று குறவனுக்குத் தன் மனைவியான குறத்தியின் நினைவுவர, பல இடங்களில் தேடியும் அவளைக் காணப்பெறாமையால் வருந்தி ஏக்கமுறுகிறான். தன் பாங்கனை குறவனிடம் குறத்தியின் அடையாளங்களைக் கூறி குறத்தியைக் கண்டு பிடிக்குமாறு வேண்ட, குறவனும் குறத்தி தலைவனின் ஸ்தலத்தில் இருப்பதை குறவனுக்குத் தெரிவிக்க, குறவனும் குறத்தியும் ஒருவரையொருவர் சந்தித்து தலைவனுக்கு வணக்கம் செலுத்துகிறார்கள்—இந்த விவரங்களெல்லாம் சுருக்கமாக தியாகேசர் குறவஞ்சியில் காணப்படுகின்றன.

இக்குறவஞ்சிக்கு நேர்மாறாக, எல்லா குறவஞ்சிகளிலும், முக்கியமாக அழகர் குறவஞ்சியில் காணும் பாணி விஸ்தாரமான அமைப்பைக் கொண்டது. மேடையில் கட்டியக்காரனின் தோற்றத்திலிருந்து ஆரம்பித்து, தலைவி மால் அழகரின் பவனியைக் கண்டு அழகர்மீது காமுறுகிறாள்; காதல் விரகத்தால் அவதியுறும் தலைவி தன் சகியை நோக்கி தலைவனிடம் சென்று தன் காதலைத் தலைவனுக்குத் தெரிவிக்குமாறு வேண்டுகிறாள்; சகிகளும், தலைவியின் தாயாரும் தலைவிக்கு சந்தோஷமளிக்கும் உபாயங்களைக் கையாண்டு சோர்வடைகின்றனர்.

அச்சமயம் குறத்தி தோன்றி, தன் நாட்டுவளம், மற்றும் தன் தொழிலைப் பற்றியும் பெருமைப்பட கூறி முடித்தபின், தலைவிக்குக் குறிபார்த்து, அவள் எண்ணப்படியே அவள் விரும்பும் தலைவனை அடைவாள் என்று உறுதி மொழி பகர்கின்றாள்: இது போன்ற, குறவஞ்சி நாடகங்களில் காணப்படும் மற்ற விவரங்கள் யாவும் அழகர் குறவஞ்சியில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தியாகேசர் குறவஞ்சியில், ராஜமோகினியின் விரக வேதனையைச் சித்தரிக்கும் கட்டத்தில் வெண்ணிலா, தென்றல், மன்மதன் ஆகியவைகளை விளிப்பதுடன்கூட ஸ்ரீ தியாகராஜரையே நேராக விளித்து அவருடைய பாராமுகத்தைக் கூறி புலம்புகிறாள்.

தியாகேசர் குறவஞ்சியில் காணப்படும் மற்றொரு விசேஷ அம்சம் யாதெனில், அகவலில் (பாடல் 20) நாரதரே குறத்தியாகத் தோன்றினார் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் 56-வது பாடலில், தும்புரு நாரதரைக் காணாமையால் சிங்கனாக வேடம் புனைந்து நாரதரைத் தேடி வந்தார் என்றும் கொடுக்கப்பட்டுள்ளது; 'கீதை தும்புரு சிங்கன் போல் துலங்கவே தோன்றனரே', அகவலில் திருவாரூர் ஸ்தலத்தைப் பற்றிய செய்திகளும் மனுநீதி சோழன் கதையும் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. குறத்தியின் பாடல்கள் வாசல்வளம், மலைவளம், குறத்தி கண்டு தரிசித்த க்ஷேத்ரங்களின் பெயர்கள் ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர, மற்ற குறவஞ்சிகளில். காணப்படாத அண்ட கோள தரு ஒன்றும் இக்குறவஞ்சில் அடங்கியுளளது. பொதுவாக மற்ற குறவஞ்சிகளில் காணப்படும் பின்வரும் விஷயங்களும் இக்குறவஞ்சியில் காணப்படுகின்றன. தலைவி ராஜமோகினி குறத்தி உரையாடல், குறத்தியின் தொழிலைப் பற்றிய தற்பெருமை, குறத்தியிடம் குறிகேட்டு பயனடைந்தவர்களின் பெயர்களும் அவர்கள் அவளுக்கு அளித்த பரிசுகளின் விவரமும், குறத்தி தலைவியை நோக்கி தெய்வ பூசைக்கு ஆயத்தம் செய்யுமாறு கூறி, தெய்வங்களைத் தொழுது தலைவிக்குக் கூறி சொல்லுதல், தலைவனின் அங்க அடையாளங்களையும் குணவிசேஷங்களையும் கூறி, ஸ்ரீதியாகராஜர் ராஜமோகினியை மருவ வரும் பொன்னாளையும் கூறுகிறாள்.

தியாகேசர் குறவஞ்சியின் ஆசிரியர் இன்னாரென்று தெரியவில்லையாதலால் ஆராய்ச்சிக்குட்பட்ட விஷயமாக உள்ளது. ஆனால், இக்குறவஞ்சியின் ஆசிரியர் கி. பி. 18 ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தார் என்று தெரியவருகிறது. இவர் மஹாராஷ்ட்டிர மன்னர் இரண்டாம் சாஹஜி (கி. பி. 1684-1712)யின் சமகாலத்தவர் என்பது, அம்மன்னரை, 3, 15, 25, 31-ம் பாடல்களில் இக்குறவஞ்சியாசிரியர் குறிப்பதிலிருந்து அறிய முடிகிறது. கலை, இலக்கிய அபிமானியான சாஹஜி மன்னரே புகழ்பெற்ற நாடக ஆசிரியராகத் திகழ்ந்தார் தியாகேசர் குறவஞ்சியை அவர் இயற்றியிருந்தால், அவர் நாடகங்களில் காணப்படும் அங்கிதமான 'தியாகேச', 'தியாகேசனுத' போன்ற முத்திரைகள் குறவஞ்சிப் பாடல்களில் அமைந்திருக்கும். அத்தகைய முத்திரையேதும் காணப்படாமையால், அம்மன்னரது சமஸ்தானத்தைச் சேர்ந்த ஒரு புலவரால் குறிப்பாக முத்துக் கவிராயரால் இயற்றப்பட்டிருக்க வேண்டும். முத்துக்

கவிராயரே மன்னர் சாஹஜியின் பேரில் ஒரு குறவஞ்சி[1] தமிழில் இயற்றியுள்ளார். சாஹஜி மன்னரின் 'கிராத விலாஸம்' என்னும் நாடகத்தில் சமஸ்க்ருதத்தில் இயற்றியுள்ள தோடயமங்களத்தை, முத்துக் கவிராயர் தம் குறவஞ்சி நாடகத்தின் ஆரம்பத்தில சேர்த்துள்ளார். இந்த மங்களம் பின் வருமாறு :

Jaya Pārvati-ramaṇa – Jaya Jānakīramaṇa |
Jaya Antakadamana - Jaya Madhusūdana |
Jaya Tripurasaṃkaraṇa – Jaya Vedoddhāraṇa |
Jaya Akhilanutacaraṇa – Jaya Janābharaṇa || Jaya Jaya ||
Jaya Raviśasinetra - Jaya Akhilanutapātra |
Jaya pāvanacaritra – Jaya Jaganmitra ||
Jaya Nandivaravāha – Jaya Aṇḍajāvāha |
Jaya Nityasotsāha – Jaya .... mitadāha || Jaya Jaya ||

தோடய மங்களத்திற்குப் பிறகு கீழ்க்கண்ட செய்யுளுடன் தனது குறவஞ்சி நாடகத்தை ஆரம்பிக்கிறார். இச்செய்யுள் அவரது அங்கிதத்தைக் கொண்டுள்ளது.

குறி சொல்ல நல்ல குறவஞ்சி வருவதும் | கன்னி
    ஸஹஜேந்திரனை கலந்து சேருவதும் | என்னும்
இவ்வகைய இ(ய)குறவஞ்சியாய் |
    பொங்கயமாய் ஸஹஜபூபதி மீதில்
அங்கிதமாக அறிந்த முன் தன்னால்
கருதிய முத்துக்கவி யுரைத்தானே.".

முத்துக்கவிராயர் தியாகேசர் குறவஞ்சியையும் இயற்றியிருப்பாரெனில் தன்னுடைய முத்திரையை குறவஞ்சிப்பாடல்களில் வைத்திருப்பார். தியாகேசர் குறவஞ்சியில் கையாண்டுள்ள தமிழின் நடை முத்துக்கவிராயரின் பாணியைப் போலில்லாமல், எளிமையாகவும், பாமர மக்களுக்குப் புரியும் வகையில் அமைத்துள்ளது. தியாகேசர் குறவஞ்சியின் ஆசிரியரை நிர்ணயிப்பதற்கான போதிய ஆதாரங்கள் குறவஞ்சிப் பாடல்களிலோ அல்லது சமகாலத்திய இதர நூல்களிலோ கிடைக்கப் பெறுமையால், இக்குறவஞ்சியை இயற்றிய புலவர் இரண்டாம் சாஹஜி மன்னர் காலத்தவரென்றும், திருவாரூர் தியாகேசர் மீதில் அளவு கடந்த பக்தி கொண்டவரென்றும், தெரியவருகிறது. தமிழ் மொழியில் எளிய நடையில், இசை நாட்டிய - நாடக ரூபத்தில் மதுரபக்தியென்னும் பகவத் காமாவை பாமர மக்களுக்கு புரியும் வகையில எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது தியாகேசர் குறவஞ்சி.

குறவஞ்சி நாடகங்கள் சம்பிரதாயமாக ஆலயச் சடங்குகளில் முக்கியமாகக் கருதப்பட்டு திருவிழாக் காலங்களில் நடிக்கப்பட்டும் வந்ததாக முன்னமே கூறினோம். அவ்விதமே தியாகேசர் குறவஞ்சியும் திருவாரூரில் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி ஆலயத்தில், கீழைக் கோபுரத்திற்கருகில் உள்ள தேவாசிரிய மண்டபத்தில் (படம்) பங்குனி மாதத்தில் நிகழும் ப்ரம்மோற்சவத்தின்போது நடத்தப்

1- 'குறவஞ்சி நாடகம்' — M. 527. தெலுங்குப் பகுதி, சரஸ்வதி மஹால் நூலகம், தஞ்சாவூர்.

பட்டு வந்ததாக ஆதாரபூர்வமாகக் கிடைத்துள்ள செய்தி கூறுகிறது. இந் நாடகம் இரவின் பிற்பகுதியில் ஆரம்பித்து விடியும்வரை நிகழ்ந்து, மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெற்று வந்ததாகத் தெரிகிறது. இக்குறவஞ்சியின் பாடல்கள் பிரசித்தமாக இருந்தன என்பதற்குச் சான்றாக, 'வாசலிது வாசலிது' என்கிற நாதநாமக்ரியை ராகத்தில் அமைத்துள்ள 25-வது பாடல், தியாகராஜ ஸ்வாமியின் கர்ப்பக்ருஹத்தின் தென்புறத்திலுள்ள பலகணியின் அருகில் நித்யோத்சவத்தின் போதும் விசேஷ காலங்களிலும் தேவரடியார்கள் நின்று பாடுவது வழக்கமாம். இது காரணம் பற்றியே இந்த பலகணிக்கு தென்ன வாசல் என்ற பெயர் நிலைத்துவிட்டது. மேலும் இக்கூற்று, தியாகேசர் குறவஞ்சி ஒரு முக்கியமான ஸ்தலபுராணம் என்பதை குறிப்படுத்துகிறது, ஆயினும் வருந்தத்தக்க விஷயம் யாதெனில், இத்தகைய சிறப்பு வாய்ந்த தியாகேசர் குறவஞ்சி நாடகம், கடந்த சுமார் 50 வருட காலமாக நடிக்கப் படாமல் மறைந்துவிட்டதேயாகும். இருப்பினும், இப்பாடல்களின் மெட்டுக்கள் அறவே அழிந்து போகாமல், திருவாரூர் கோவிலைச் சேர்ந்த நாட்டிய மகளிரின் குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி ப. ஆர். திலகம் என்கிற பெண்மணியிடமிருந்து எனக்குக் கிடைத்துள்ளன.

ஸ்ரீ தியாகேசர் குறவஞ்சியின் ஆதாரபூர்வமான பதிப்பை வெளியிட வேண்டும் என்னும் நோக்கத்துடன் பாடல்களை ஸ்வர ஸாஹித்யத்துடனும், நாட்டியத்திற்கு வேண்டிய ஜதிக் கோர்வையுடனும் நேர்முகமாகச் சேகரித்த வர்ணமெட்டுக்கள் போன்றவைகளுடனும் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளது, இதற்கு தஞ்சை மஹாராஜா சரபோஜியின் சரஸ்வதி மஹால் நூலகத்திலிருந்து தமிழ்ச் சுவடி, சம்ஸ்க்ருத மொழியில் உள்ள சுவடி இவைகளின் பிரதிகளும், சென்னையில் அடையாறிலுள்ள டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயர் நூலகத்தி லிருந்து கிடைத்த திரு. எஸ். கலியாண சுந்தரமய்யரின் பதிப்பும் பெரிதும் உதவின. இவற்றுள் கலியாண சுந்தரமய்யரின் பதிப்பு சுத்த சாஹித்தியத்துடன் 67 பாடல்களைக் கொண்டு பூர்த்தியானது. இப்பாடல்கள், காப்பு, தோடயம், தரு, கீர்த்தனம் இவைகளைத் தவிர, செய்யுட்களில் உள்ள சீர்வகைகளான கட்டளைக் கலிப்பா, அகவல், சந்தவிருத்தம், தாழிசை, தரவுக் கொச்சகக் கலிப்பா, கொச்சகக் கலிப்பா ஆகியவைகளையும் கொண்டு அமைந்துள்ளன. சரஸ்வதி மஹால் நூலகத்திலிருந்து கிடைத்துள்ள தமிழ்ச் சுவடியில் சுமார் அறுபது பாடல்கள் உள்ளன. அவற்றுள் முதல் எட்டு பாடல்கள் விடுபட்ட வார்த்தைகளுடன் பூர்த்தியாக இல்லை; 57-வது பாடல் முழுவதும், 60-வது பாடலில் ஒரு பகுதியும் காணப்படவில்லை. சம்ஸ்க்ருத மொழியிலுள்ள சுவடியில் 27 பாடல்களே உள்ளன. அச்சிடப்பட்ட, கலியாண சுந்தரமய்யரின் பதிப்பு பூர்த்தியாகவுள்ளதால் அதையே அடிப்படையாக கொள்ளப்பட்டுள்ளது. இப் பிரதியிலும் 66-வது பாடல் பூர்த்தியாக இல்லாவிட்டாலும் நடை முறையில் பாடப்பட்டு வந்த முறையை திருவாரூரைச் சேர்ந்த ஒரு வயோதிக மாதிட மிருந்து அறிந்த விடுபட்ட சாஹித்யத்தை பூர்த்தி செய்து திருத்திக் கொடுக்கப் பட்டுள்ளது. பாடல்களின் சாஹித்யம் எல்லா பிரதிகளிலும், ஸ்ரீமதி திலகம் மாள் அளித்த பாடாந்திர முறையிலும் ஏறக்குறைய ஒரே மாதிரியாக உள்ளது.

இவைகளை ஒருங்கே திரட்டி ஒப்பிட்டு, திருத்தப்பட்ட பாடமுறையை இந்த பதிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. பாட பேதங்களை ஆங்காங்கே தகுந்த குறிப்புகளுடன் கொடுக்கப்பட்டுள்ளது.

தியாகேசர் குறவஞ்சியின் பாடல்களின் வர்ண மெட்டுக்களை கவனிக்கும் போது அச்சிடப்பட்ட பதிப்பிலும், சம்ஸ்க்ருத சுவடியிலும் ஒரு சில பாடல் களுக்கு இராகத்தின் பெயர் கொடுக்கப்பட்டுள்ளன. இரண்டு பிரதிகளிலும் காணப்படும் இராகங்கள் திலகம்மாள் அளித்த வர்ண மெட்டுக்களிலிருந்து கண்டு பிடிக்கப்பட்ட இராகங்களினின்று வேறுபட்டுள்ளது. சம்ஸ்க்ருத சுவடி ஸ்ரீ கனேசாய நம: என்னும் இறைவணக்கத்துடன் ஆரம்பிக் கிறது. பின்வரும் பாடல்கள் விருத்தம் என்னும் தலைப்பின்கீழ் காணப்படுகிறது. அச்சிடப்பட்ட பிரதியில் இறை வணக்கப் பாடல்கள் காப்பு என்னும் தலைப்பின்கீழ் காணப்படுகின்றன. தமிழ்ச் சுவடியிலே இவை யாவும் குறிக்கப்படவில்லை. இராகமும் குறிக்கப்படவில்லை. தரு மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. கீழ்க்காணும் அட்டவணையில் இராகங்களின் பெயர் கள் கொடுக்கப்பட்டுள்ள பாடல்களின் எண்ணும் இராகங்களின் பெயர் களும் கொடுக்கப்பட்டுள்ளன.

பாடலின் எண்		சம்ஸ்க்ருதச் சுவடி	அச்சுப் பிரதி	சம்பிரதாயமாக பாடப்பட்டு வந்த இராகங்களின் பெயர்கள்
பாடல்	10	ஆஹிரி	——	ஹுசேனி
,,	11	காம்போஜி	காம்போஜி	காம்போஜி
,,	12	நாத நாமக்ரியா	——	சாவேரி
,,	13	ஆஹிரி	——	சஹானா
,,	15	பந்துவராளி	பந்துவராளி	சாரங்கா
,,	18	பைரவி	பைரவி	இராகமாலிகை
,,	21	—	ஸௌராஷ்ட்டிரம்	சங்கராபரணம்
,,	22	ஸௌராஷ்ட்டிரம்	—	ஸௌராஷ்ட்டிரம்
,,	23	மத்யமாவதி	மத்யாமாவதி	கமாஸ்
,,	25	குறஞ்சி	சங்கராபாணம்	நாதநாமக்ரியா
,,	27	பரசு	நாதநாமக்ரியா	பெஹாக்
,,	29	—	பைரவி	கல்யாணி
,,	30	–	மோஹனம்	மோஹனம்

Dr. வெ. பிரேமலதா

ஸ்ரீ தியாகேசர் குறவஞ்சி

(குறவஞ்சி நாடகம்)

காப்பு

1. **இராகம்** ; *பௌளி* **விருத்தம்**

> *திங்கள்சேர் சடையர் ஆரூர்த்*
> *தியாகாதி ராசர்*[1] *மீதில்*
>
> *துங்கவங் கார மோகத்*
> *துறைக்குற வஞ்சி பாடப்*
>
> *பங்கயத் திருமால் வேதன்*
> *பண்ணவர் முனிவர் போற்றும்*
>
> *மங்களந் தருவா தாவி*
> *வாரணங் காப்புத் தானே.*

[குறிப்புரை] - *துங்கம் - மேன்மை. வங்காரம் - பொன். பங்கயத்திருமால் - தாமரையை ஏந்திய திருமால்; தாமரைப் பூவிலுள்ள திருவையுடைய மால் எனினும் ஆம். வாதாவி வாரணம் - வாதாவி விநாயகர்; ஸ்தல விநாயகர்.*

இராகம்: *பௌளி* **விருத்தம்**

ஸாரீ ‿ பககா பா தாபாபா ‿ கா பா

திங் . கள் . . சேர் சடையர் ஆரூர்

‿ தாபாதா பா பா பாபா காபதப பாதகா ||

தியாகாதி ரா சர் மீ தில் . . . . ||

காபாதா பநிதாபா ‿ தாபா

து ங் க வ ங் கா ர மோ ஹத்

1. ' *தியாகாதிராசர்* ' — ' *ஸ்ரீதியாகேசர் பிரபந்தங்கள்* ' பதிப்பாசிரியர் எஸ். கலியாண சுந்தரமய்யர், 1946. டாக்டர் உ.வே. சுவாமிநாத அய்யர் நூலகம், அடையாறு.

க பா கப கரிஸரி — பககா பா ||

துறைக் குற வஞ்சி . பா . . டப் ||

பா தபபா காபாதா ஸ்ரீஸ்ர — ரீஸர

ப ங் . . . . . க யத் திருமால் வே தன்

ஸ்ா ரீ க்ரி ஸ்ா தாரீஸ்ா — ஸ்ா ஸ்ரிரிஸ் ஸ்நிதாதநிதா பா ||

பண் . ண . வர் முனிவர் போ ற் று ம் . . . . ||

பா தாஸ் ஸ்ா ஸ்ஸ்ஸ்ர ஸ்ரிரிஸ் நிதா பா

ம ங் க ள ம் தருவா தா . . . . வி

கா பா தாபா க பகரிஸரி க ரிகா பா ||

வா ' ர ணங் காப்பு ' ' த் தா ' ' னே ||

2. இராகம் : பிலஹரி — விருத்தம்

மடங்கலா சனர்செங் காவி
மாலைமார் பழகர் ஏழு

விடங்கினில் உயர்ந்த வீதி
விடங்கத்யா கேசர் மீதில்

வடந்திகழ் கொங்கை மங்கை
மலைக்குற வஞ்சி பாடக்

கடந்திகழ் விட்ட வாசற்
கணபதி காப்புத் தானே.

[கு-ரை] மடங்கலாசனர் - சிம்மாசனாதிபதி. செங்காவி மாலை - செங்கழுநீர் மாலை - ஏழு விடங்கு - சப்த விடங்கம் ; அவை ஆதிவிடங்கம், அவனி விடங்கம், புவனி விடங்கம், நீல விடங்கம், நகர விடங்கம், அழக விடங்கம், வீதி - விடங்கம் என்பன (திருவாரூருலா, 233 - 5 குறிப்பு). பிற தலங்களிலுள்ள மூர்த்திகளைப் போலல்லாமல் வீதியிலும் எழுந்தருளுதல் பற்றித் தியாகேசருக்கு வீதி விடங்கர் என்ற திருநாமமும் உண்டு. விட்ட வாசற் கணபதி - இவர் சந்நிதியிலுள்ள பெரிய கோபுரத்தையடுத்த வடக்கு வாசலில் எழுந்தருளியிருப்பவர்.

இராகம் : பிலஹரி **விருத்தம்**

தா பா பா பபா — பா பாபா ரிக பா — பா

ம டங் கா சனர் செங் காவி மா . லை மார்

பபபா பததப மகரி காரீ ||

ப மு கர் . . . . ||

க ப தா *நி தா *நி தா *நி தாத — பாத — பபாத

ஏ . மு விடங்கினில் உயர்ந்த வீதி விடங்க

த ரிஸா ஸ்ஸ் ஸ்ாஸ்ா தரிஸ்நிதப - ப*நிதபமகரீ

த்யா.கேசர் மீதில் . . . .

ரிகபத ஸ்ாநித |

. . . . ||

தஸ்ா ரிக்ா ரீக்ா க்ா க்ா ரிக்ரிக் க்ாக்

வடந் திகழ் கொங்கை மங்கை மலைக்குற வஞ்சி

கர் ரிக்ப்ம் க்ரிஸ்ஸ்ா நித ||

பா ட . . . . ||

தக்ாரி மக் ரிஸ்ஸ்ா தரீ ஸ்ா ஸ்ஸ்

கடந்திகழ் . . . . விட்ட வாசல்

ஸ்ஸ்ஸ் ஸ்நிரிஸ்நிதாப — தா பபா பா பா

கணபதி . . . . காப்புத் தானே

ப*நிதபமக - ரிகாரி - ரீகபதஸ்ா - ஸ்நிரிஸ் ஸ்நிநிததஸ்ா ||

. . . .

* கைசிகி நிஷாதம் - பாஷாங்கஸ்வரம்.

3. இராகம் : தன்யாசி **விருத்தம்**

தங்கமா மகுடஞ் சூடுஞ்
சகசிராசேந்த்ரன் போற்றும்

மங்கைமா[1] வரைய ராரூர்
வன்மீகத் தியாகர் மீதில்

கொங்குசேர் குழலாள் தெய்வக்
குறவஞ்சி தன்னைப் பாடச்

செங்கைவே லவனுந் தேவாதி[2]
தேவனுங் காப்புத் தானே.

[கு-ரை] சகசிராசேந்த்ரன் - தஞ்சாவூரிலிருந்து கி.பி. 1684 முதல் கி.பி. 1714 வரை அரசாண்ட மகாராஷ்டிர மன்னர். கொங்கு - மணம்

இராகம் : தன்யாசி **விருத்தம்**

ஸா ஸ கா கமபா பா பா

தங்க மா மகுடஞ் சூ டும்

நி ப ப பா பா ப பா பா பா பநீ,தா பா ||

ச க சி ரா சேந்த் ரன் போற்றும் . . . . ||

பநிஸ்ஸா ரிஸ்ஸா—ரீஸா

வங்க மா வரையர் ஆரூர்

1. 'வங்கமா' - கலியாண சுந்தரமய்யர் பதிப்பு, 1946, Dr. உ. வே. சா. அய்யர் நூலகம், அடையாறு.

2. "தேவதேவ" - ௸ ௸ ௸.

ஸ்க்ரீஸ — ரீஸா ஸா ஸா ஸ்ஸரீ ரிஸ்ஸரீரீ ||

வன்மீகத் தியாகர் மீதில் ||

பநிஸ் கா க்க் ப்ம் கா ரிஸ் — ரீஸா

கொங்கு சேர் குழலா . . ள் . தெய்வக்

நிநிஸ்ரிஸ் ஸா ஸா — நிபா பநிஸ்ாரிஸ்நி பநிஸ்நிநிஸ்தாப ||

குறவஞ்சி தன்னைப் பா . ட.................................||

க ம ப நி நீ நிநி நிஸா, நிதபம பநி ஸ்ாரி

கொங். கை, வே லவ னும் . . . . தே. வ தி

ஸ்ாரி ஸா

தேவனும்

நி பா நி பநிஸ்ரிஸ்ரி நிஸா ||

காப்புத் தா. னே . . . . . . ||

4. இராகம் : கேதாரம் **விருத்தம்**

நிரந்தர நேமி மாயன்
நிதிமுசு குந்த ராசன்
புரந்தரன் போற்றும் ஆரூர்ப்
புனிதத்யா கேசர் மீதில்
துரந்தரம் பருவக் காமச்
சுகக்குற வஞ்சி பாட[1]
வரந்தரு தெய்வ வாணி
மலர்ப் பதங் காப்புத் தானே.

[கு. ரை.] நிரந்தரம் - எப்பொழுதும் - நிதிமுசுகுந்தன் - நிதியையுடைய முசுகுந்த சக்ரவர்த்தி. புரந்தரன் - இந்திரன். வாணி – கலைமகள்.

இராகம் : கேதாரம் **விருத்தம்**

கமா பம காரி — ஸா ஸா |

நிரந்தர நேமி மாயன் |

ஸ ஸ ஸ ப ம கா ரி ஸ ரி கா ஸா ||

நி தி மு சு குந் த ரா ஜ ன் ||

ஸ மா கமா பா பா || நி ப பா

பு ரந் தரன் போற்றும் || ஆ ' ரூர்ப்

ம க மா ப நி பா பா — ஸ்ரஸ்நிரீ ||

புனித த்யா கேசர் மீதில் . . . ||

ஸ் ப்ா ம் ம்க்க்ரி ஸ்ரி காஸா ஸ்ஸ்ஸ் ஸாஸ்

து ர ந் த ரம் ... ... ப ரு வக் காமச்

ஸ் ரீ ஸ்ஸ் ஸாஸ் ஸ்ா ஸ்நிரிஸநி பா ||

சு கக்குற வஞ்சி பாட . . . . ||

கமா பநி ஸ்ாஸ் ஸ்ா நிரிஸ்நி பா |

வ ரந் தரு தெய்வ வா ணி . . . . . . |

ம பா நிபா பா, ம மக கரிஸ ஸ ம க ம பா ||

ம லர்ப் ப தம் கா ' ப் பு . . . . . . தா . . . . னே ||

தோடயம்

5. இராகம் : நாட்டை **தாளம் :** ரூபகம்

கடிகமழ்தண் புஷ்பச் சோலை சூழ்

கமலைவசந் தப்பொற் றியாகர்மேல்

1. குரந்தரம் போற்றும் தியாகக் குறவஞ்சி தன்னைப் பாட, —பின் குறிப்பு, கலியாண சுந்தரமய்யர் பதிப்பு 1946, Dr. உ. வே. சு. அய்யர் நூலகம், அடையாறு.

கொடியிடைக்கஞ் சத்துள பாவைநேர்
　　குறவஞ்சி பாட
வடி சுடர்ச்செஞ் சக்கரச்சோதிமால்
　　மருகன் நெடுங்கைக் குள்கோடுசேர்
தடவயிற்றன் கொற்றப் பாதமே
　　தருமன்பு தானே. (ஜெய ஜெய)[1]

[கு. ரை.] கடி - மணம். கஞ்சத்துளபாவை - திருமகள். வடிச்சுடர் - வடிக்கின்ற சுடர். மருகன் - முருகக்கடவுள். கோடு - கொம்பு.

6. சேல்விழியஞ் சொற்கினியோர் பாகர்
　　தேவரகண்டப் பெருமாள் மீதில்
கோலவஸந் தக்குயில் போல் விறு
　　குறவஞ்சி பாட
நாலுமுகம் பெற்றிடுதே தாவும்
　　நாரணனின் புற்றிடவே வாழும்
வேலவர்செம் பொற்பதமெந் நாளும்
　　மிகுமன்பு தானே. (ஜெய ஜெய)[1]

[கு. ரை.] தேவரகண்டப் பெருமாள் - தியாகேசர் திருநாமம்.

இராகம் : நாட்டை　　　　**தாளம்** : ரூபகம்

; க ம , ப பா பா ;	ப ப பா பா , ப க ம பா	
. க டி . கமழ் தண்.	பு ஷ் பச் சோ . லை சூ . ழ்	
; ப நி , ப பா மா மா	மா ; மா , க் ப ம ரி	
. கம . . லை வ ஸந் தப்	பொற் தியா . கர் மே . ல்	

1. ‘ஜெய ஜெய’ — TMSSML. Skt. Ms.

; க ம , பா ம மா ; || மா மம கமா ரி ரிஸ ரீ ||
. கொடி . யிடை கஞ் . || சத் துள பா . வை நே - ர் ||
; நிஸ ரீ கா மா ; || பா ; நீ மா பா ; ||
. குற வ ஞ் சி . || பா . ட . . . ||
; மப , கமா பா ; || நீ பா நீ ஸா , ஸ் ஸா ||
வடி . சுடர் செஞ் || சக் கர ஜோ . தி மால் ||
; ஸ் நி , ரீ , ரீ ஸா || ஸா ஸ்நி நிஸ்ரிஸ் ரீ ; ||
. ம ரு . கன் நெ டுங் . || கைக்குள் கோ . . டு சேர் ||
ரிஸ் . ரி க்ா மா ; || க்ா க்ா ப்ம்க்ரி ரீ ஸா ||
; த ட . வ யிற் றன் || கொற்ற பா . . த மே . ||
; பநி ஸ நி பா மா ; || க்ா ; கமபநி ஸ்நிபம || ரீ = ||
. த ரு ம ன் பு . || தா . னே . . . . || . = ||

6. ; சேல் வி ழி ய ஞ் || சொற்கினியோர் பாகர் ||
; தே வ ர கண்ட || பெருமாள் மீதில் ||
; கோ ல வ ஸ ந் த || குயில் போல் வீறு ||
; கு ற வ ஞ் சி . . || பா . ட . . . . ||
; நா . லு முகம் . || பெற்றிடுவே . தாவும் ||
; நா ர ண னி ன் . || பு ற் றி ட வே வாழும் ||
; வேலவர் செம் . || பொற்பத மெ ந் நாளும் ||
; மி கு ம ன் பு . || தா னே . . . . ||

மங்களம்

7. இராகம் : சுரடி **தாளம் :** சாபு

1. மங்களம்தியா கேசருக்கு மாஹ்ருதய வாசருக்கு
   செங்கழுநீர் தொடையர்க்கு ஜெய மங்களம்

2. வீதிவிடங் கேசருக்கு விண்ணமரர் பூசிதர்க்குத்
தூதிரவிற் சென்றவர்க்கு ஜெயமங்களம்.

3. தென்றல் வாசலழகருக்கு செவந்தித் தோடணிபவர்க்குக்
கொன்றைமலர் வேணியர்க்கு ஜெயமங்களம்.

4. கம்பிக்கா தழகருக்குக் கமலைத்தியா கேசருக்குச்
செம்பொற்சிங் காதனர்க்குச் ஜெயமங்களம்.

[கு. ரை.] (1) செங்கழுநீர்த் தொடை - தியாகேசருக்குரிய மாலை. தொடை. மாலை. (2) தூது சென்றது சுந்தரமூர்த்தி நாயனார் பொருட்டு. (3) தென்றல் வாசல் - இது ஸ்ரீ தியாகேசர் சந்நிதிக்குத் தென் பக்கத்துள்ள கற்பலகணி (4) கம்பிக்காதழகர் - தியாகேசர் திருநாமம்.

இராகம் : சுரடி   தாளம் : சாபு

; ப ஸ நி த ப || பா நி மா பா ||
மங் க ளம் . தியா || கே ச ருக் கு ||
; , ம ப நி நீ || ஸா ஸ நி நி ஸா ||
. . மல் ஓற்ருத ய || வா ச ருக் கு ||
; , நி நி நி நீ || நி நீ த நி ஸா ||
. . செங் க ழு நீர் || தொடை யர்க் கு ||
நி ஸா நி த பா || ம நீ , த ப ம க ரீ ||
ஜெ ய ம ங் க || ளம் . . . . . . ||

[இதேபோல் மற்ற அடிகளைப் பாட வேண்டும்.]

2. ; வீ தி விடங் || கேசருக்கு ||
; , விண்ணமரர் || பூசிதர்க்கு ||
; , தூ தி ர வி ற் || சென்றவர்க்கு ||
ஜெ ய ம . ங் க || ளம் . . . . ||

1. 'மங்களம் மால் பூசிதர்க்கு' — Dr. U. V. S. Iyer Library, Adyar and TMSSML. Skt. MS.

3\. தென்றல் வாசல || முகருக்கு ||

; , செவந்தி தோ || டணி பவர்க்கு ||

; , கொன்றை மலர் || வேணியர்க்கு ||

ஜெய மங்க || ளம் . . . . ||

4\. ; கம்பிக் காத || முகருக்கு ||

; , கமலைத் தியா || கேசருக்குச் ||

,, செம்பொற் சிங் || காதனர்க்குச் ||

ஜெய மங்க || ளம் . . . . ||

*ராஜ மோகினி தோன்றல்

8\. **இராகம் :** தோடி **தாளம் :** ஆதி (2 களை)

நிதிவளங் குலவும் வீதி
    நிறைந்தசெந் தமிழ்சே ராரூர்ப்
பதிவளர் தியாக ராஜர்
    பவனிகண் டாசை கொண்டே
துதிபெறு மரம்பை போலச்
    சுரதமோ கனவொய் யார
ரதிபதி மெச்சு மோகன[1]
    ராஜமோ கினிவந் தாளே.

[கு.ரை.] பவனி - உலா. ரதிபதி - மன்மதன்

* கிடைத்த பிரதிகளிலெல்லாம் காப்புக்குப்பின் கட்டியக்காரன் வருகை காணப்படவில்லை. தியாகேசர் பவனி வருதலைக் குறியாமல் ராஜமோகினி அவர் மேல் ஆசை கொண்டாளென்று இக்குறவஞ்சியாசிரியர் மிகச் சுருக்கமாகத் தெரிவித்துள்ளார்.' — Dr. U.V.S. Iycr's Library, Adayar.

1 மோகராசமோகினி'-TMSSML. Skt.MS., Dr. U.V.S. Iyer's Lib., Adayar.

இராகம் : தோடி　　　　　　　　　　　தாளம் : ஆதி (2 களை)

; , ஸ் நி த பா க ம பா மாபம கா |

. . நி தி வ ளம் குல வும் வீ . . . |

; , கம நி நித மா | க க பமாம கரி ரீ ||

